1662

17 MAR 1924

உ

சண்முகன் றுணை.

எட்டிகுடி

## ஸ்ரீ சிவசுப்பிரம்ணியர்

# ஸ்தோத்திர மஞ்சரி.



18 MAR 1924

இஃது

"தமிழ் நாவலன்"

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளையால்

இயற்றப் பெற்றது.

(இரண்டாம் பதிப்பு)

சென்னை

பாலகமலாம்பாள் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1923. [அணா 4.

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

O26:38·2H E1
N23
177073

இதை கவனிக்கவும்! ஒரு அருமை!!

ஜெர்மன் தேசத்தில் செய்யப்பட்ட நூதனமான

# டிக்-டாக் வால் கிளாக்.



இக்கடிகாரம் இப்படத்தில் காட்டியபடியே இருக்கும். மற்ற கடியாரங்களுக்கு வாரம் ஒரு முறை சாவி கொடுக்க வேண்டியது. சுவற்றில் லெவல் பார்த்து வைக்கவேண்டியது. அப்படிக் கில்லாவிட்டால் கடியாரம் ஓடாது. ஆனால் இந்த கடியாரங்கள் அம்மாதிரியல்ல. இவைகளுக்கு சாவி கொடுக்கவேண்டியது அவசியமில்லை. இக்கடிகாரம் கீழ்புறத்தில் காணும் சங்கிலிக்கு ஒரு புறம் பாரமான ஒரு குண்டு கட்டியிருக்கும். அக்குண்டை மெதுவாக மேலுக்கு இழுத்து விட்டால் ஒருநாள் எல்லாம் நடந்து மறுபடியும் கீழ்பாகத்தில் வந்துவிடும். உடனே மேலுக்கு இழுத்து விட்டால் மறுபடியும் ஒருநாள் நடக்கும். இம்மாதிரி பிரதிதினமும் செய்து வந்தால் கடியாரம் சரியாக காலத்தைக் காட்டும். இம்மாதிரியான கடியாரங்கள் இதுவரையில் வந்ததில்லை. ஆங்கிலேய தேசத்தில் மாத்திரம் உபயோகித்து வந்தார்கள். இப்போதுதான் இந்த கடியாரங்கள் தருவித்திருக்கிறோம்.

இதன் கிரயம் 1-க்கு ரூபா 3—0—0 [வி. பி. செலவுவேறு]

---

பெரிய டாக்டர்களால் பரிசோதித்து கியாதிபெற்ற

சுகாநந்தா என்னும்

# ரகஸ்ய பை.



— இந்த ரப்பர்பை உபயோகிப்பதினால், உலகத்தில் கிடைக்காத இன்பத்தையும், சுகத்தையும், கொடுப்பதுடன் வெள்ளை, மேகம், மற்ற மூத்திர வியாதிகளை கிட்ட வராமல் காப்பாற்றும், சுகம்தேடும் நாளிலும், இந்த ரப்பர் பை, உபயோகித்து சுகம் அனுபவித்தால் ஸ்திரீகளின் வியாதி ஆண் திரேகத்திற்கு ஒட்டாமல் காப்பாற்றும் இதுதான் ரகசிய பை. இதை உபயோகிப்பதால் வெள்ளை, கொருக்கு, முதலிய வியாதிகள் கிட்ட நெருங்காது

ரப்பர் பை 1-க்கு 1—4—0 [வி. பி. செலவு பிரத்தியேகம்.]

விலாசம்:—வி. எஸ். வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி. 105, மதராஸ்.

உ

சண்முகன் துணை.

894·811108
3001 B

எட்டிகுடி.

ஸ்ரீ சிவசுப்பிரமணியர்

# ஸ்தோத்திர மஞ்சரி.

இரண்டாம் பதிப்பு,

#177073

இஃது

"தமிழ் நாவலன்"

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளையால்

இயற்றப்பெற்று,

சென்னை

பாலகமலாம்பாள் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை 1923. அணா 4.

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

நிகரற்றது!          புகழ்பெற்றது!          குணமுற்றது!

உலகமெங்கும் பிரசித்திப்பெற்ற

மதராஸ்

ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனியார்

# பட்டணம் பொடி

உபயோகப்படுத்துங்கள்.

1770[illegible]

கொத்தலர் கொண்டு சூடுங் [illegible] டை கோதை யூளே
அத்தர் சவ்வாது மல்லி யலை [illegible] ் நன்றுா ஞலும்
சித்தஜன் தாயா ராகுந் திருவளா [illegible] சென்னை மாநகர்
சுத்தனம் அம்பாள் கம்பெனி அளமணத்துக் கொவ்வாதே.
துமயிடைமாதே கேளாய் சொல்லுவே னுனக்குயானென்று
படியினிற் பிரம்ம பத்திரி பதமுடன் வருத்துச் சுன்னம்
இடமுடன் நெய்யுஞ் சேர்த்துச் செய்யும் அம்பாள் கம்பெனிப்
பொடியினைப் போடா மூக்குப் புண்ணியஞ் செய்யா மூக்கே.

நண்பர்களே !

இந்தப் பட்டணம்போடி யானது 20-வருடகாலமாக அநேக ஜில்லாக்களில் நல்ல பெயர்பெற்று உலாவிக்கொண்டிருப்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமே,

இந்தப் பட்டணம் போடியை உபயோகிப்பவர்களுக்கு ஞாபக மறதியை நிவர்த்திசெய்து மனதிற்கு உற்சாகத்தை உண்டுபண்ணும் இதர கம்பெனியின் பொடியைப்போல் சீக்கிரத்தில் கெட்டுப்போகாமல் குணமும் மணமும் மாராமலிருக்கும்.

இந்தப்பொடியின் மகிமையை ஒவ்வொருவரும் ஒருமுறை பார்த்தால் நண்பர்களுக்கு இனிது விளங்கும்.

| | | | |
|---|---|---|---|
| [illegible]சை 1-க்கு ரூபா | 3—0—0 | கால் வீசை | 0—12—0 |
| [illegible]ரை வீசை | 1—8—0 | 1-சேர் | 0—10—0 |

டின்சார்ஜ் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

☞ எமது கம்பெனியின் சாமான்களின் கேட்லாக்வேண்டுவோர் அரையணா ஸ்டாம்பு அ[illegible]ப்பிபெறவும்.

ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி,

தபால் பெட்டி நெ 3, மதராஸ்.

# முக்கிய கவனிப்பு.

இதனுல் எல்லாக் கனதனவான்கட்கும், புத்தக வியாபாரிகட்கும், அறிவிப்பதாவது, இப்புத்தகம் தேவையானவர் அடியிற் கண்ட விலாசத்தில் நேரிலும், கடிதமெழுதியும் பெற்றுக்கொள்ளலாம். பதில் தெரிய விரும்புவோர் ரிப்ளைக் கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்பவும்.

விலாசம்:—

"ஸ்ரீபாரதிவாணி" அண்டு கோ.

பன்னீர் வியாபாரம், கடைத்தெருவு, மங்கநல்லூர்,

மாயவரம் தாலூகா.

## கெட்டிச்சாய உடல்பட்டுச் சேலைகள்

சில்லரையாயும், பலவூர்வியர்பாரிகள் மொத்தமாயும் எங்களிடம்வாங்கி நன்மதிப்படைந்து வருகிற நமது சொந்தநெசவில் தயாரித்தச் சிகப்பு, கருப்பு பலமாதிரி வன்னம் சேலைகள் வேண்டுவோர் விலைமுதலிய விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதி தெரிந்துகொள்ளவும்.

விலாசம்:—

பொன்-[illegible]த்துவேலாயுதமுதலியார்,

ஜவுளிவியாபாரம்,

செம்பொன்னார்கோயில்,

மாயவரம் தாலுக்கா,

# முன்னுரை.

அருந்தமிழ்த்தாயின் அருமைப்புதல்வர்காள் !

அடியேன் என்னுடைய புலமைத்திறத்தைக் காட்டவேண்டுமென்று இந்நூலை இயற்றவில்லை.

ஸ்ரீ ஆறுமுகக்கடவுள் மீது எனக்கேற்பட்ட பத்தி மேலீட்டாலும், தமிழ் அபிமானத்தாலும் 'குளறிக்குளறிக் குமரனைப்பாடு' என்ற முதுமொழியை அனுசரித்து அக்கடவுள்மீதே சில செய்யுட்களையியற்றி அவருடைய வரப்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்னும்நோக்கங்கொண்டே, எட்டிகுடியிற்றிருக்கோயில் கொண்டெழுந்தருளி யிராநின்ற ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள் மீது, இத்துதி நூலை இயற்றினேன். அக்கடவுள்பேரில் பாடிய இந்த "பக்தியானந்த செய்யுட்களை" பக்தி சிரத்தையுடன் படிப்போரனைவர்க்கும், அக்கடவுள் தண்ணருள் புரிவாரென்பது திண்ணம். இந்நிலவுலகின்கண் வித்வசிகாமணிகளாய்த் துலங்கும் பத்தசிகாமணிகளின் பாதகமலங்களை என் சிரமேற்கொண்டு, நான் இந்நூலை இரண்டாம்பதிப்பாகவும், முன்னையைவிட சீர்திருத்தங்களுடனும், அருணகிரிநாதரருளிய "திருப்புகழ்" பாடல்களையுஞ் சேர்த்து வெளியிட்டனன். ஆதலின், இதிற்காணும் குற்றங்களைநீக்கி, குணத்தைமட்டும் கொள்வது கற்றுணர்ந்தவர்களின் கடமையாகும்.

குறள்.

துப்பாய துட்கொள்ளுஞ் சுந்தரஞ்சே ரோதிமத்தை
யொப்பாய மக்கள்களு முண்டு.

இங்ஙனம்,

எஸ். கே. கோவிந்தசாமிபிள்ளை,

# சாற்றுக்கவிகள்.

இஃது, தரங்கம்பாடி, செந்தமிழபிமானி

ஸ்ரீமத், வீ. இருளப்பிள்ளையவர்களாலியற்றியது.

ஆசிரியவிருத்தம்.

பாரோங்கி வளர்ஜீவ பயிர்தழைய கருணைபொழி
பரசிவை யினுதர பதுமா
பனிவரையிற் றோன்றிதன் னடியர்பிணி மிடிதிமிரம்
பறித்தசீர் ஞான பானு
சீரோங்கி வளரெட்டி குடிமருவு சிவசுப்பிர
தேசிகற் கன்பி னோடு
செந்தமிழ்ச் சந்தமொடு தந்த மஞ்சரிதனைச்
செப்பினான் சைவ மரபின்
தாரோங்கி வளர்புயன் குமாரசாமி சுதன்
சர்ச்சன சங்க சீலன்
சாற்றிடு மிலக்கிய விலக்கணச் சொற்பொரு
டன்மை யறிதேற்ற முள்ளான்
காரோங்கி வளர்கண்ட மகனடியை மறவாத
கவிஞன் கோவிந்த சாமி
கழருமிப் பாவிற்கு முருகனருள் புரிவனெனக்
கணிப்பதே சான்ற தாமே. (1)

---

இஃது, குற்றாலம், போர்டு ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிட்,

ஸ்ரீமான்-மு. தண்டாயுதபாணிக் காடவராயர்

அவர்களியற்றிய ஆசிரியம்.

கோலமார் குமார சாமி குமாரன் கோவிந்த சாமி
சாலவே புலவர் யாருந் தணிப்பருங் களிப்புற் றோங்க
மாலயற் கரிய தானு மலர்விழி வழியே வந்த
பாலனைப் பசிய தூய தமிழினாற் பாடி னானே. (2)

இஃது, மாயவரம்தாலுக்கா, செம்பொன்னார்கோயில்,

## ஸ்ரீமான், பொன்-முத்துவேலாயுதமுதலியாரவர்கள்

இயற்றிய ஆசிரியம்.

மாமலையை வில்லாக்கி மணியரவை நாணேற்றி
மாலினைக் கணைய தாக்கி
மாபுரமெ ரித்தவர்க் கிளையமா மதலையாய்
வந்தவ தரித்து ஞானப்
பூமகளை நாவீட்டும் பூமகளை சிறையிட்டு
புனிதனுந் தந்தை யற்கு
போதித்த மந்திரன் சத்திவேலன் குகன்
புகழொணா கிருபா கரன்
தேமருவு மலர்சோலை சூழெட்டி குடியிலுறை
சிவசுப்ர மண்யர் மீது
தேக்கிட்ட அன்பினாற் பாடினான் ஸ்தோத்திரஞ்
செந்தமிழி னினிய நடையன்
பாமகள் விலாசனாங் கோவிந்த சாமிசௌ
பாக்கியன் சுகுண சீலன்
பத்தியொடு வேலனை துதிப்பவர்க் கினிதொடிப்
பாரெலாம் புகழோங் கவே. (3)

---

இஃது, கும்பகோணம் புத்தக வியாபாரம்,

காயன் விகடகேசரி யெனும்,

## ஸ்ரீ, கே. வி. கதிர்வேல்பிள்ளையவர்க ளியற்றியவை,

வெண்பா.

கங்கையணி வோன்புதல்வன் கானமயில் வேலவன்மேற்
சங்கீத தோத்திரங்கள் சாற்றினான்—இங்கு
புலவனெனுங் கோவிந்த சாமி புதிய
(1) பலவர்ண மெட்டுகளாற் பார்த்து. (4)

எழுதினான் சிந்துடனே யீரைந்து பாடல்
பழுதிலாப் பக்திமிகப் பண்பாய்த்—தொழுதினம்
மானார் மழுக்கரத்தோன் மைந்தனும் வேலவன்மேற்
(2) தேனா மெனலாந் தெளிந்து. (5)

உ

வேலவன் றுணை.

# எட்டிகுடி

# ஸ்ரீசிவசுப்ரமணியர் ஸ்தோத்திரமஞ்சரி

## விநாயகர் துதி.

வெண்பா.

சீரோங்கும் எட்டிகுடி சேர்சுப் பிரமணியன்
பேரோங்க வேதுதிகள் பேசுதற்கு—நேரோங்கும்
சங்கரன்றன் மைந்தன் சதுர்மறைகொண் டாடுமைந்த
ஐங்கரன்பொற் றுணை யதாம்.

---

## சரஸ்வதி துதி.

வெண்பா.

---

அன்னை சரஸ்வதியே அன்புடனே நின்னருளை
எந்நாளும் கொண்டு துதி யேற்கவே—உன்னதமாய்
ஆணும்பெண் ணும்போற்றும் ஆறுமுகன் மேற்பாடப்
பூணுமதி தாரீ புரிந்து.

---

## நூற்பயன்.

வெண்பா.

---

செல்வமும் வான்புகழுந் தேசத்திற் றனீந்து
வல்வினையாம் பாசமது வாராமல்—நல்முருகன்
பாதசே வைதருவான் பக்திமிகு மித்துதியை
வேதமெனச் சிந்திக்க வே.

## அவையடக்கம்.

வித்தையிற் சிறப்புற் றோங்கும் விற்பனர் சபைக்கு முன்னே
புத்தியிற் சிறுவன் நான் புலமையின் றன்மை யில்லான்
இத்துக்கு மெனவிந் நூலை ஜெகந்தனில் செப்ப லுற்றேன்
சித்தம்வைத் திதனி டத்தே சேர்பிழை பொறுக்க மாதோ.

## பதிகம்,

### ஆசிரியவிருத்தம்.

பார்புகழு மெட்டிகுடி யிற்கோயில் கொண்டிட்ட
பாலசுப் பிரமனி யனே
பன்னிருகை யுடனே தண் ணருள்பொழியும் விழிகளும்
பரவவரு வடிவே லனே
தார்புனே சண்முகா தட்சணம் வந்துநீ
தனேயனேக் காத்திடு வையே
தாமதஞ் செய்யாது தரணியில் வந்துநீ
தயவுவைத் தாள்கந்தானே
நேர்முகம தாகநீ பார்க்கவினே நீங்கிடும்
நேசனே சரவணபவா
நீணிலந் தன்னிலுன் பாதமே கெதியென்று
நேயனே போற்றி னேனே
சீர்மிகும் வேலனே சிங்கார லோலனே
சித்தம்வைத் தாளும் வேலா
செகம்புகழு மெட்டிகுடி வாழ்கின்ற தங்கவொளி
சிவசுப்பிர மண்ய தேவே. (1)

மண்ணுலக மீதிலே கண்கண்ட தெய்வம்நீ
மஹாஷண் முகப்பொ ருளும்நீ
மைந்தர்கள் வேண்டவே மயில்மீ தமர்ந்துவரு
மகிமையுள கந்தவேள்நீ
பொன்னுலக மேவுகற் பகமாலேயுட னருள்
புரிந்திடவென் னெதிரில் வருவாய்
பூசுரர் தேவருங் கொண்டாடு தெய்வமே
போற்றுசற் குருவும் நீயே
விண்ணுலக மீரசுசெய் வீரனே தீரனே
வெற்றிவேல் பெற்ற கோவே
வேதவே தியர்தொழும் மாதவன் மருகனே
வேண்டினேன் ஆறுமு கனே
சென்னிதனி லுன்பாத புட்பங்கள் சூடினேன்
சித்தம்வைத் தாளும் வேலா
செகம்புகழு மெட்டிகுடி வாழ்கின்ற தங்கவொளி
சிவசுப்பிர மண்ய தேவே. (2)

கதிரவன் போலவே நின்மகிமை யொளிமிகக்
காட்சியது நல்கும் பாலா
கனவிலும் நினைவிலும் நின்பெருமை சொல்லியே
காதலாய்ப் போற்று வேனே
மதிவளரு மாகம புராணங்க ளியாவுமுனை
மகிழுடன் புகழு மென்றும்
வாகான பக்தர்மன மகிழவே பச்சைமா
மயிலேறி வருமுருகனே
கதிநல்க வேமகா சுவாமிமலை மேவிடும்
கார்த்திகேயா கந்தனே
கருணைநீ செய்குவாய் சென்னிமலை யார்ந்திட்ட
கங்கைபா லாவிங்கிதா
* சிதமெனக் கருளென நின்பாத மணுகினேன்
சித்தம்வைத் தாளும் வேலா
செகம்புகழு மெட்டிகுடி வாழ்கின்ற தங்கவொளி
சிவசுப்பிர மண்ய தேவே. (3)

கந்தனீ நோக்கிடப் பிணியொன்று சேராது
கவலைய நமில்லை யை
கருணை கடாட்சமது வைத்திட வேண்டுமே
கருதுகும ரேச குருவே
அந்தமாய் நீயுமே பச்சைமயி லேறியே
அடியனைக் காக்க வருவாய்
அசுரர்குலம் வேரறப் புரிகின்ற வேலனே
அண்டினே னுனது பாதம்
இந்தவுல கம்புகழும் மலைமேவும் முருகனே
இங்கோடி வாரு மய்யா
இனிமையொடு பாலனென் கந்தனே உன்றனை
எண்ணினே னெந்த நாளும்
சிந்தைகெட எமபடர்க ளணுகா திருந்திடச்
சித்தம்வைத் தாளும் வேலா
செகம்புகழு மெட்டிகுடி வாழ்கின்ற தங்கவொளி
சிவசுப்பிர மண்யதேவே. (4)

---

* சிதம்-ஞானம்.

பாதிமதி சூடிய பரமன்மகிழ் புதல்வனே
பாலனைக் காக்கொ ணாதோ
பக்தியா யுன்னருளை வேண்டினா னிப்போது
பதமதைப் பாடவி லையோ
நீதியாய் வந்துமே நிந்தனைகள் நீக்கியே
நின்பதம் சேர்க்கொ ணாதோ
நித்தியமும் நெஞ்சமது பஞ்சுபோ லஞ்சியான்
நின்னடி வணங்க விலையோ
மேதினி யெலாம்புகழ் ஐயனே மெய்யனே
மீனும்பி கைமைந் தனே
மேன்மேலு மென்றனுக் கருள்புரிய வேண்டும்நீ
வித்தகர்க் கருள்செய் குகனே
சீதக் கடம்பனே பக்தன்முன் வந்துநீ
சித்தம்வைத் தாளும் வேலா
செகம்புகழு மெட்டிகுடி வாழ்கின்ற தங்கவொளி
சிவசுப்பிர மண்ய தேவே. (5)

கோலா கலச்குமர வடிவேல னேயுன்னைக்
கோரினோர்க் கருள்பு ரியவே
கோதில்செந் தூரிலும் சோலைமலை யொடுகுமர
கோட்டத் தமர்ந்த குருவே
வேலாயு த ...வு ளேவெற்றி வேல்கொண்டு
மேவுநீ ...ருக வருக
வேண்டினே னுன்றனை யொருகினைவ தாகியே
வேறுதுணை யில்லை மெய்யா
ஆலமுண் டவர்பால ஐங் ... கினாயனே
ஆளுமெனச் சுப்பை யனே
அகண்டபுவி தன்னிலே யுன் மகிமை யறியாமல்
அறிவீனர் வாடு கின்றார்
சீலமிகு நல்லறிவு தந் ...ருள் புரிந்தெனைச்
சித்தமவைத் தாளும் வேலா
செகம்புகழு மெட்டிகுடி வாழ்கின்ற தங்கவொளி
சிவசுப்பிர மண்ய தேவே. (6)

அன்பாக வுன்கோயில் சாரிவலம் வந்துமே
அடிதொழுது நின்றேனையா

ஆகாத பாண்டுநோய் சூலையெண் குன்மமும்
அரைகடி சிரங்கு நோயும்
தென்பறும் அறுபத்து நான்குசுர தோஷமும்
தேள்கடி விஷங்கள் யாவும்
திகைத்திடும் வாதமும் ஓயாச் சயித்யமும்
தீராத பிளவை யெதுவும்
வன்பாக முடிகின்ற பிணியெலாம் விலகிட
மால்மருக னேயரு ளுவாய்
வாசவன் தேவரும் சதுர்மறைகள் புகழ்கின்ற
வடிவேற் கரங்கொள் முருகா
சென்றிடப் பூதப் பிசாசுமுதல் யாவுமே
சேணளவு ஓட வேண்டும்
செகம்புகழு மெட்டிகுடி வாழ்கின்ற தங்கவொளி
சிவசுப்பிர மண்ய தேவே. (7)

மிடியறப் புகழொடு விளங்கிவரு செல்வனே
மேலான சோதி வடிவே
வித்தைமிக வாய்ந்திட்ட வள்ளலே வருகவே
மெய்ஞ்ஞா னம்மேவு குருவே
வடிவுமிகு செம்மையுறு திருமேனி வாய்ந்திட்ட
வள்ளிதெய் வானை பங்கா
வல்லசுரர் நெஞ்சம் பதைத்திடச் செய்துமே
மாஜெயம் பெற்ற பரனே
படிமிசை யுன்றனைச் சதமென்று நம்பினேன்
பரமகுரு வான வரதா
பன்னிரு கரத்தனே எத்தலமும் நின்கருணை
பதியவிளை யாடுஞ் சீலா
திடுமென வருங்கால னுக்கஞ்சி வேண்டினேன்
சித்தம் வைத் தாளும் வேலா
செகம்புகழு மெட்டிகுடி வாழ்கின்ற தங்கவொளி
சிவசுப்பிர மண்ய தேவே. (8)

பெற்ற தாய் தந்தையும் பிறவியு மிருந்தென்ன
பின்கூட வருவ துண்
பெண்சாதி பிள்ளைகளு ம்பமு மிருந்தென்ன
பின்வருவ தாரு முண்டோ

உற்றவொரு நேசனும் உயிரினுக் குதவியோ
வுற்றிடத் துதவி யுண்டோ
உயிரோ டிருப்பதுவும் நிசமல்ல சண்முகா
வுன்கிருபை யேதுணை யதாம்
நத்தியே என்றனது கோரிக்கை யீடேற
நற்சேவை தந்தரு ளுவாய்
நாதா வுதித்தபின் காயமே நிலையென்று
நம்பவே யில்லை வேலா
சிற்றறிவி னுலொன் றறியாத சிறுவன்யான்
சித்தம்வைத் தாளும் வேலா
செகம்புகழு மெட்டிகுடி வாழ்கின்ற தங்கவொளி
சிவசுப்பிர மண்ய தேவே. (9)

அருள்புரியும் வேலனே வள்ளிபங் காளனே
ஆடுமயி லமர்சண் முகா
அகிலமதி லடியேன் கல்வியும் கற்றிலேன்
அதின்சுவையை உண் மறியேன்
தெருள்மிகும் பாவலர்கள் போ ம் செய்கிலேன்
தெய்வமே யென்ன சென்மம்
தீரனே தரணியி லுதித்தபின் னுன்பாதம்
தெரியாம லுழல்கின் றனன்
கருவாகி யுருவாகி மண்மீ வந்தபின்
காணுபொ ருள்நீ யல்லவா
கடல்சூழு மண்டலந் தன்னிலுன் னைப்போல
காட்சிதருந் தெய்வ முண்டோ
திருவொடு துதிக்கின்ற கோவிந்த சாமியைச்
சித்தம்வைத் தாளும் வேலா
செசம்புசழு மெட்டிகுடி வாழ்கின்ற தங்கவொளி
சிவசுப்பிர மண்ய தேவே. (10)

ஸ்ரீ சண்முகன் திருவடிகளே சரணம்.

பதிகம் சம்பூரணம்.

---

## காவடிச்சிந்து.

(வளையற்சிந்து வர்ணமெட்டு)

எட்டிகுடி வேலவன்மேற் சிந்து தமிழ்ப்பாட—முன்னாள்
வந்தவினையோட—அருள்
தந்திடுங்கைகூட—புகழ்
ஈசனருள் பாலன் அத்திமுகன் நாட. (1)

வறுமைப் பிணியைத்தீர்க்கு மென்றன் வடிவேலா—துதி
ஏற்குமுமைபாலா—எனைக்
காக்குமனுகூலா—உன்னை
வணங்கிநின்று துதிப்பவர்க்கு வரமருளுஞ் சீலா. (2)

தோகைமயி லேறும்சிவன் கோரும் முருகோனே—திரு
மாலின் மருகோனே—ஒரு
நாளுமறவேனே—உன்னை
தோத்கரித்த பாலகர்க்கு அருள்புரி சண்முகனே. (3)

ஆறுமுக மானசிங் காரவடி வேலன்—வள்ளி
தெய்வானை மகிழ்லோலன்—யானை
முகனுக்கிளைய பாலன்—அன்பர்
அனுதினமும் துதிக்கும் சண்முகன் சூரருக்குக்காலன். (4)

அண்டர்துதி செய்யும்பதி வாசன் மலர்வாசன்—எனக்
கருள்புரியும் நேசன்—சத்தி
யீன்றமுருகேசன்—நம்பும்
அடியவர் வினையறுக்கும் அகிலப்பிர காசன். (5)

செகந்தனில் வாழ்வோர்துதி செய்யும் குபரேசன்—தனது
அன்பன் விசுவாசன்—கவி
ராஜர் மெச்சுமுல்லா . . —இசை
செப்பும் கோவிந்தசாமி தாசனுக்கு நேசன். (6)

---

(வெள்ளிமலையொத்த பலமேடை என்றமெட்டு)

எட்டிகுடிச் சண்முகனே போற்றி—பால்
ஏகமான காவடிதோளேற்றி—வந்தேன்
இங்கிதமயில்மேலேறி யிப்போதே வாரும்நேரில்
காண—புகழ்—தோண. (1)

மயிலேறு முருகேசா வெனைத்தேற்றி—என்றன்
மனசஞ்சலத்தை மாற்றி—இந்த
மைந்தனெனைக் காக்கவேண்டும் இக்ஷணத்திலையா முன்பு
வாரும்—அருள்—தாரும். (2)

உன்றனைப் பணிந்தவர்க்குத் தொல்லை—மிக
உற்றுவருவதேதுமில்லை—இந்த
உலகந்தனில் கண்கண்ட தெய்வமெனவே பக்தர்
உன்னையே—சொல்வார்—முன்னையே. (3)

செகமெங்கும் புகழ்பெற்ற வேலா—எங்கள்
சிவன்மகிழ்ந் தருளிய பாலா—பதம்
செப்பிவரும் கோவிந்த சாமியை நீதினம்
காராய்—அருள்—தாராய். (4)

---

(வண்ணத்தினை மாவைத் தெள்ளியே என்றமெட்டு.)

அன்னையுமையவள் மைந்தனே ஆநந்த
அகிலம் துதிபுகழ் கந்தனே என்
அல்லலைத் தீருநீர் என்றனே உன்னை
ஆண்டினேனே தண்டபாணி
கண்டு உனைத் தண்டம்செய்தேன்
அனுதினம் செய்தேன் சிந்தனை திரு
ஆறுமுகா காரும் என்றனை (1)

சண்முக சடாக்ஷர லோலனே சிவ
சங்கரன் தனக்குகந்த பாலனே ஸ்ரீ
சரவண பவகுக வேலனே பொல்லா
தாருகாசூரன் மேருபோல்வர
கூறும் வேலினால் நேரினில் கொன்று
தந்தைக்கு பிரணவ முரைத்தவா அந்தத்
தையல்வள்ளிக் குகந்தவா (2)

உலகத்திலுன்றன் பேராட்டம் எங்கும்
உத்தமர் கூறுவது சிரேஷ்டம் துதி
உரைத்து வரமன நாட்டம் நல்ல
உச்சிதமாய்ப் பச்சைமயிலில்
அச்சமின்றி மெச்சியேறி
இக்ஷணம் வருவாய் கொண்டாட்டம் உனைக்
காணாததால்மன வாட்டம் (3)

இப்புவியி லெங்கும்புகழ் வாசன் பதம்
எழுதிய கோவிந்தசாமி தாசன் புவி
எங்கும் கவிவாணர் நேசன் தினம்

எனக்காருமே துணையாருமே
இலையாருமே யிடர் தீருமே

இன்பமிகுங் குமரேசா எங்கும்
இணையிலா தமர்ந்த காசா (4)

---

(ஆண்டிப் பண்டாரம் என்றமெட்டு.)

பல்லவி.

சாமிநாதனே—சிவ
காமிபாலனே—புகழ் (சாமி)

சரணநுபல்லவி.

காசினியோர் தாம்துதிக்கும் கந்தனெனும் வேலவனே
ஈசனருள்பெற்றிலங்கும் எட்டிகுடியதனில்வாழும் (சா)

தரிசனமுன்னைவேண்டிச் சந்ததமுமுன்றனிடம்
தாள்பணியவோடிவந்தேன் தயவுமிகத்தந்திடுவாய் (சா)

ஆதாரமுன்னையன்றி அடியேனுக்காருமில்லை
ஆதரித்தென்றனை நீ அன்புடனேகாத்திடுவாய் (சா)

வன்னமாமயிலிலேறி வள்ளிதெய்வானையோடு
வந்துஅருள்புரிந்து துன்பங்களேகிடவே (சா)

பத்தியுடனுனையடுத்தேன் பாலவடிவேலவனே
இக்ஷணமேசிகியிலேறி என்னிடுக்கண்தீர்த்திடுவாய் (சா)

அசுரரைந்தான்வதைத்து அவனிதனில்கீர்த்தியுற்றாய்
அடியார்கள் தம்மைக்காக்க ஆறுமுகமாய்த்துலங்கும் (சா)

வேண்டாதபேர்களுக்கு விலகியேதானிருப்பாய்
வேண்டினோரைப்பட்சமுடன் ஆண்டருளுமிக்ஷணமே (சா)

கோவிந்தசாமிபதம் குதுகலமாய்ப்பாடியானும்
கோரினேனுன்னைத்தினம் கூடிஓடிநாடித்தேடி (சா)

---

## ஆனந்தக்களிப்பு.

செகம்புகழ் எட்டிகுடி வாழும் எங்கள்
சிவசுப்பிர மண்யன் பேரிலெந் நாளும்
புகழ்ந்திடும் தென்மொழி யாலே சிந்து
போற்றியே பாடினேன் இப்புவி மேலே (1)

ஆனந்தக் களிப்பிதன் சீரும் பெருக
ஆனைமுகத் தையனை வரமது தாரும்
வாணியுன் மலரடி தொழுது நாளும்
வடிவேலன் மேற்றுதி பாடினே னருள்வாய் (2)

நம்பியே முருகனைப் பாட இந்த
நாடெங்கு முன்றனைப் போற்றிக்கொண் டாட
கெம்பீர மானவடி வேலா எங்கும்
கீர்த்திமிக வோங்கிய கந்தனெனுஞ் சீலா (3)

சங்கரன் பாலகதி ரேசா [illegible]
சாதுபுகழ் எட்டிகுடி ஆறுமுக நேசா
மங்காத மயின்முரு கேசா என்றன்
மனத்துய ரகற்றியருள் செய்விசு வாசா (4)

ஆறுமுக பன்னிரு கையா கருணை
ஆறிரண் டாம்விழி துலங்கிடும் மெய்யா
வேறுகதி யில்லைவடி வேலா மகிமை
மிக்கபழ னிப்பதியில் மேவுகுண சீலா (5)

ஈசிசுத சண்முகா வாவா என்றன்
இனிவினி லமர்ந்துமே சிறுவனைக் காவா
வேலனுன் மேற்சிந்து பாட பக்தர்
வேல்மயில் முருகா வெனச்சத்தம் போட (6)

உன்றனை லயம்வந்து நானும் எனக்கு
உற்றிடுங் குறைகளைச் சாற்றியே தானும்
சந்ததமுன் னருள்வேண்டித் தொண்டு நாளும்
சார்ந்துசெய் தேன்பல கவிகளைக் கொண்டு (7)

நம்பினேன் பக்ஷமதைக் காட்ட உனக்கு
நலமுள்ள காவடிக ளுறுதியாய்க் கட்ட
செங்குமா ரனேயென்முன் வாவா நீயும்
தீரமயி லேறியே இக்ஷணங் காவா (8)

சர்வனை வேத்தியங்கொண் டேத்தி யங்கே
சாம்பிராணி தூபங் கற் பூரமா லாத்தி
நிர்மலம் தாகவே காட்டி கூர்மை
நேர்ந்திடும் அலகுதனை யுடலெங்கும் பூட்டி (9)

பலபல சங்கிலிகள் பூட்டி மேலே
பலவித மான ரஸக் குண்டுகளும் மாட்டி
நிலவயச் சலாகையும் பூட்டி உனை
நினைந்துமே முள்மீதி லேகாலை நாட்டி (10)

பத்தருன் சன்னிதியை நாடிச் செலுத்தும்
பக்ஷமிகு காவடிகள் கோடானு கோடி
சித்திதேன் காவடிகள் கோடி இன்னும்
திவ்யபால் காவடிக ளும்பல கோடி (11)

வாசபன்னீர்க் காவடி யனேகம் நல்ல
மலைக்யுள இளநீரின் காவடி யனேகம்
பாசமொடிக் காவடிகள் கட்டி வேலா
பதம்பெறச் சிந்துமுதல் பாட்டுகளைச் சாற்றி (12)

அன்பர்களுன் னாலயம் நாடிச் சிறந்த
ஆறுமுக வேலாவுன் புகழதைப் பாடி
எண்ணிமுடி யாதஜன சங்கம் ஆடி
இன்பமாய் வருகிறோ மேவீதி யெங்கும் (13)

பூரிபுல் லாங்குழ லனேகம் தஞ்சைப்
புகழ்பாண்டு நாகசுர மேளமு மனேகம்
காரென முழங்கவரு கின்றோம் புகழ்
கந்தனே மனமுகந் தனதருள் தந்தாள் (14)

வாணவே டிக்கையதிர் வேட்டு நடக்க
வருவர்பலர் வெடிசத்த ஓசையைக்கேட்டு
வேணபெண்கள் மாவிளக்குக் கொண்டு வடி
வேலாவுனை வணங்கியே பலவிதத் தொண்டு (15)

கோவில்வலம் வந்துனருள் வேண்டி நின்று
கோருவார் எட்டிகுடி ஆறுமுகத் தாண்டி
பாவவினை நீங்கிடப் போற்றி வரும்
பற்பல விரதங்கள் செய்வோமெனச் சாற்றி (16)

துதித்திடும் பாலர்களுக் கருள்வாய் மிக்க
சூரசம் மாரா குமாராநீ வருவாய்
கதிதரு முன்பாத தாசன் நின்றன்
கருணைபெறு கோவிந்த சாமிவிசு வாசன் (17)
இருதயத் தன்புடனே நாடி இங்கு
எழுதினேன் பக்தியாய் சிந்துகவி பாடி
திருவருள்செய் புலவர்கள் வாழி இதைச்
செப்பிடக் கேட்பவர்க ளனைவரும் வாழி (18)
புகழ்பெற்ற சேவற்கொடி வாழி தினம்
புனிதமா யாண்டிடும் தேவர்கள் வாழி
செகம்புகழ் எட்டிகுடி வாழி துதி
செப்பிடுங் கோவிந்த சாமிதமிழ் வாழி. (19)

ஆனந்தக்களிப்பு முற்றிற்று.

---

## திருப்புகழ்.

---

தாந்த தந்தன தான தனத்தந் தனதான

ஓங்கு மைம்புலனோட நினைத்தின் பயர்வேனை
ஓம்பெறும் ப்ரண வாதி யுரைத்தென் றனையாள்வாய்
வாங்கி வெங்கணை சூரர் குலக்கொம் புகடாவி
வாங்கி நின்றன ஏவிலு லகக்குங் குமரேசா
தூங்கி லம்புய வாச மணக்குஞ் சரிமானும்
தூண்ட பைங்குற மாது மணக்குந் திருமார்பா
காங்கை யங்கறு பாசின் மனத்தன் பர்கள்வாழ்வே
○ காஞ்சி ரங்குடி ஆறு முகத்தெம் பெருமாளே (1)

---

○ காஞ்சிரங்குடி—எட்டிகுடி.

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத்—தனதான.

உறமுற் றிருசெப் பெனவட் டமுமொத்
திளகிப் புளகித் திடமாயே
உடைசுற் றுமிடைச் சுமையாக் கவடுத்
தமிதக் கெறுவத் துடன்வீறு
தரமொத் துபயக் களபத் தளமிக்
கவளத் தருணத் தனமீதே
சருவச் சருவத் தழுவித் தழுவித்
தவமற் கவிடுத் தழல்வேனோ
அரிபுத் திரசித் தசவக் கடவுட்
கருமைத் திருமைத் துனவேளே
அடல்குக் குடநற் கொடிகட் டியனர்த்
[illegible]ரப் படையைப் பொருவோனே
பரிவிற் * றவருக் கருள்வைத் தருள்வித்
தகமுத் தமிழைப் பகர்வோனே
பழனத் தொளிர்முத் தணியெட் டிகுடிப்
பதியிற் குமரப் பெருமாளே (2)

---

தனதத்த தனதத்த தனதத்த தனதத்த
தனதத்த தனதத்த—தனதான.

கடலொத்த விடமொத்த கணையொத்த பிணையொத்த
கயலொத்த மலரொத்த விழிமாதர்
கனசெப்பு களினத்து முலைவெற்பை நிகர்செப்பு
கதிர்முத்து முலைதைக்க அகலாதே
மிடலுற்ற கலவிக்கு ளுளநச்சி வளமற்று
மிடிபட்டு மடிபட்டு மனமாழ்கி
மெலிவுற்ற தமியற்கு னிருபத்ம சரணத்தை
மிகநட்பொ டருள்தற்கு வருவாயே

---

* தவர்—அகத்தியர்.

தடையற்ற கணைவிட்டு மணிவஜ்ர முடிபெற்ற
தலைபத்து டையதுட்டன் உயிர்போகச்
*சலசத்து மயிலுற்ற சிறைவிட்டு வருவெற்றி
தருசக்ர தரனுக்கு மருகோனே
திடமுற்ற கனகப்பொ தவில்நட்பு டனடித்த
சிவனுக்கு விழியொத்த புதல்வோனே
செழுநத்து மிழுமுத்து வயலுக்குள் நிறைபெற்ற
திகழெட்டி குடியுற்ற பெருமாளே (3)

---

தத்தன தத்தன தானா தானா
தத்தன தத்தன தானா தானா
தத்தன தத்தன தானா தானா தனதான.

மைக்குழ லொத்தவை நீலோ மாலோ
அக்கணி ணைக்கிணை சேலோ வேலோ
மற்றவர் சொற்றெளி பாலோ பாகோ வடிதேனோ
வத்திர மெய்ச்சசி தானோ நானோ
குத்துமு லைக்கிளை நீரோ மேரோ
வைப்பதி டைக்கிணை நூலோ ?மேலோ வெனமாதர்
*தக்கவு றுப்பினுள் மாலே மேலாய்
லச்சைய றப்புணர் வாதே காதே
சைச்சையெ னத்திரி நாயே னேயா தலையாதே
தற்பொறி வைத்தருள் பாராய் தாராய்
தற்சம யத்தக லாவே தைா
கத்தும யிற்பரி மீதே நீதான் வருவாயே
முக்கணர் மெச்சிய பாலா சீலா
சித்தசன் மைத்துன வேளே தோளார்
மொய்த்தம ணத்தது மூாயோன் மாயோன் மருகோனே

---

* சலசத்து—சீதை ? மேலா—ஆகாயமே,

* தக்க உறுப்பு—சொல்லப்படாத மற்றை அவயம்.

முத்தமிழ் வித்வவி னோதா கீதா
மற்றவ ரொப்பில ரூபா தீபா
முத்திகொ டுத்தடி யார்மேல் மாமால் உறுவோனே

இக்குவி ளைத்தவி ராலூர் சேலூர்
செய்பழ நிப்பதி யூரா வாரூர்
மிக்கவி டைக்கழி வேளூர் தாரூர் வயலூரா

எச்சுரு திக்களு நீயே தாயே
சுத்தவி றற்றிறல் வீரா தீரா
எட்டிகு டிப்பதி வேலா மேலோர் பெருமாளே (4)

---

# திருப்புகழ்

## வேறு

## பொதுப்பாடல்கள்

---

*தாத்த தானன தாத்த தானன தாத்த தானன—தந்ததான*

எட்டி லேவரை பாட்டிலேசில நீட்டிலேஇனி தென்று தேடி
ஈட்டு மர்பொருள் பாத்துணுதிக லேற்றமானகு லங்கள் பேசிக்
காட்டி லேஇயல் நாட்டிலேபயில் வீட்டிலேஉல கங்களேகக்
காக்கை நாய்நரி பேய்க்குழாமுண யாக்கைமாய்வ தொழிந்திடாதோ
கோட்டு ० மாயிர நாட்டனுடுறை கோட்டு ? வாலிப மங்கைகோவே
கோத்து வேலையி லார்த்தசூர்பொரு வேற்சி காவள துங்கவேளே
பூட்டு வார்சிலை கோட்டுவேடுவர் பூட்கை சேர்குற மங்கை பாகா
பூத்த மாமலர் சாத்தியேகழல்போற்று தேவர்கள் தம்பிரானே (1)

---

० ஆயிர நாட்டன்—ஆயிரங் கண்களையுடைய தேவேந்திரன்.

? வால் இபமங்கை—தெய்வயானை,

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த—தனதான.

வருபவர்க ளோலை கொண்டு நமனுடைய தூத ரென்று
மடிபிடிய தாக நின்று தொடர்போது
மயலதுபொ லாத வம்பன் விரகுடைய னுகு மென்று
வசைகளுட னேதொ டர்ந்து அடைவார்கள்
கருவிஅத னாலெ றிந்து சதைகள்தனை யேய ரிந்து
கரியபுன லேசொ ரிந்து விடவேதான்
கழுமுனையி லேயி ரென்று விடுமெனும வேளை கண்டு
கடுகிவர வேணு மென்றன் முனமேதான்
பரகிரியு லாவு செந்தி மலையினுட னேஇ டும்பர்
பழநிதனி லேஇ ருந்த குமரேசா
பதிகள்பல ஆயி ரங்கள் மலைகள்வெகு கோடி நின்ற
பதமடியர் காண வந்த கதிர்காமா
அரவுபிறை பூளை தும்பை விலுவமொடு தூர்வை கொன்றை
அணிவர்சடை யாளர் தந்த முருகோனே
அரகரசி வாய சம்பு குருபரகு மார நம்பு
மடியர்தமை ஆள வந்த பெருமாளே (2)

---

தனதத்த தத்த தனதான
தனதத்த தத்த தனதான.

மனைமக்கள் சுற்ற மெனுமாயா
வலையைக்க டக்க அறியாதே
வினையிற்செ ருக்கி அடிநாயேன்
விழலுக்கி றைத்து விடலாமோ
சுனையைக்க லக்கி விளையாடு
சொருபக்கு றத்தி மணவாளா
தினகற்ச ரித்ர முளதேவர்
சிறைவெட்டி விட்ட பெருமாளே (3)

தனதன தனன தான தனதன தனன தான
தனதன தனன தான—தனதான

மதிதனை இலாத பாவி குருநெறி இலாத கோபி
மனநிலை நிலாத பேயன் அவமாயை
வகையது விடாத பேடி தவநினை விலாத மோடி
வரும்வகை இதேது காயம் எனநாடும்
விதியிலி பொலாத லோபி சபைதனில் வராத கோழை
வினைஇகல் விடாத கூளன் எனைநீயும்
மிகுபர மதான ஞான நெறிதனை விசார மாக
மிகுமுன துரூப தானம் அருள்வாயே
எதிர்வரு முதார சூர னிருபிள வதாக வேலை
இயலொடு கடாவு தீர குமரேசா
இனியசொல் மரூத சீலர் கருவழி வராமல் நாளும்
இளைமைய துதாநு மாக நினைவோனே
நதியிட னராவு பூணு பரமர்கு ருநாத னென
நடைபெறு கரே மான மயில்வீரா
நகைமுக விநோத ஞான குறமினு டனேகு லாவு
நவமணி உலாவு மார்ப பெருமாளே (4)

---

தானனா தானன தந்ததான
தானனா தானன தந்ததான

வாரிமீ தேஎழு திங்களாலே
மாரவே ளேவிய அம்பினாலே
பாரெலா மேசிய பண்பினாலே
பாவியே னாவிம யங்கலாமோ
சூரனீள் மார்புதொ ளைந்தவேலா
சோதியே தோகையம் ர்ந்தகோவே
மூரிமால் யானைம ணந்தமார்பா
மூவர்தே வாதிகள் தம்பிரானே (5)

எட்டிகுடி
ஸ்ரீ சிவசுப்பிரமணியர்,
ஸ்தோத்திர மஞ்சரி முற்றிற்று.

---

# பிழை திருத்தம்.

குறிப்பு:—முன்னுரையிலிருந்து பக்கங்கள் குறிப்பிட்டிருக்கிறது

| பக்கம். | பாட்டு ெந | வரி | பிழை | பிழைதிருத்தம் |
|---|---|---|---|---|
| 2 | 1 | 9 | குமாரசாமி | குமாரசாமிச் |
| ,, | , | 15 | கழுருமிப் | கழறுமிப் |
| 3 | 3 | 6 | தாதையற்கு | தாதையற்குப் |
| ,, | ,, | 8 | புகழொணு | புகழொணுக் |
| 4 | 4 | 2 | நான் | யானே |
| 5 | 1 | 8 | தாள்கந்தானே | தாள்கந்தனே |
| 9 | 9 | 12 | வேலா | யரசே |


## சிவசொரூப சாஸ்திரம்.

சிவநேயச் செல்வர்காள்! கவனியுங்கள்!

சைவ புராணங்கள், சைவ ஆகமங்கள், சைவ சரித்திரங்கள், யாவற்றையும் படித்தறிய வேண்டிய சிவபெருமான் அணிந்திருக்கும் காரண சரித்திரங்கள் முழுதும் இப்புத்தகத்தில் காணலாம்.

இதன் விலை அணு 12. வி. பி. செலவு பிரத்தியேகம்.

ஸ்ரீபாரதிவாணி அண்டு கோ,
பன்னீர் வியாபாரம், கடைத்தெருவு.
மங்கநல்லூர்.




விலை பாக்கெட் 1-க்கு 0—8—0
1-டஜன் 5-0-0

# ரூபாய் 100-இனம்!

## சர்வதேள் விஷசஞ்சிவி.

எங்கள் உலகப்பிரசித்திப்பெற்ற
சர்வ தேள்விஷ சஞ்சீவி

குணமில்லை என்று ரூபிப்பவர்களுக்கு ரூபாய் 100-இனம் சர்வதேள் விஷ சஞ்சீவியால் தேள்கடி, விஷக்கடி, பாம்புகடி மற்ற எவ்வித விஷக்கடியானபோதிலும் உடனே நீங்கும்.

ஒரு தடவை உபயோகியுங்கள்
[ வி. பி. செலவு வேறு.

கம்மி விற்பனை !

மிகவும் பெயர்பெற்றது



பாதி விலை!!

நீடித்து உழைக்கக்கூடியது!

## கைக் கெடியாரங்கள்.

3-வருஷம் காரண்டியுடனும், ஒரு அழகிய தோலுடனும், கொடுக்கப்படும். இந்த கெடியாரத்திற்கு எவ்வித கெடியாரமும் சமம் கிடையாது. எங்கள் கம்பெனி பெயர் எல்லோருக்கும் தெரியவேண்டுமென்று ரூபா 15-விலையுள்ள கெடியாரத்தை பாதிவிலைக்கு ்கையில் கட்டும் தோலுடன் ரூபா. 7—8—0

[வி. பி. செலவு பிரத்தியேகம்.]

விலாசம்;—

வி. ஏ. எஸ். பாணி கம்பெனி,

தபால் பெட்டி நெ. 17, மதறாஸ்.

# இதை மறக்கவேண்டாம் !!!

பிரான்ஸ் தேசத்து
புதிய வாசனை
திரவியம்!!

## லிலி ஆப் தி வாலி




இதை உபயோகிக்க உபயோகிக்கமிக்க வாசனை உண்டாகும் மனதிற்கு உல்லாசமுண்டாகும், பரிமளப் பூந்தோட்டம் உங்கள் கூடவே இருக்கும், கல்யாண காலங்களிலும் மற்ற சந்தோஷ காலங்க்ளிலும் அவசியம் இருக்கவேண்டியது.

| | |
|---|---|
| மாதிரி புட்டி விலை | 0—2—0 |
| 1-டிறும் | 0-12—0 |
| ½-அவுன்ஸ் அழகிய புட்டியுடன் விலை | 1—8—0 |
| 1-அவுன்ஸ் புட்டி விலை | 2—8—0 |

## இது ஒரு நூதன வாத்தியம்

வீட்டிலேயே பழக்கம் செய்துகொள்ளலாம் கேட்கச்செட்கமிக்க அருமையான வாத்தியம் இதுதான் ஜலதரங்கம்.



இந்த ஜலதரங்கத்துடன் அனுப்பப்படுகின்ற இரண்டு கொப்புகளை இரண்டு கைகளில் வைத்துக்கொண்டு வாசிப்பீர்களாகில் மிக்க அருமையான சப்தத்தை உண்டு பண்ணும்.

விலை ரூபாய் 1—0—0

விலாசம்:—பீடர் வாச்சு கம்பெனி,

தபால் பெட்டி 27, மதறாஸ்.